**இமதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, இமதுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 130,330 தொகை குறைவாகக் காட்டப்படிருந்தது.

(ஆ) ரூபா 5,349,300 தொகை பெறுமதியான இமதுவ பஸ் தரிப்பிடக் காணி மற்றும் சந்தைக் காணி ஆகிய சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய கூட்டுத் தொகை 6,861,622 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துனை பதிவேடுகளின் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே அவதானிக்கப்பட்ட சமமிமைகளின் கூட்டுத் தொகை ரூபா 1,754,691 தொகையாக இருந்தது.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுத் தொகை ரூபா 20,272,296 தொகையான 04 பெற வேண்டிய கணக்கு மீதிகள் மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டு பெறுமதி ரூபா 21,368,613 தொகைக்கான செலுத்த வேண்டிய மூலதன செலவுகளைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 5,349,320 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உரித்துறுதி, ரூபா 63,854,730 தொகைக்கான இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் , தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் நூலக புத்தகங்கள் தொடர்பாக நாளது வரை ஆக்கப்பட்ட சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில்

தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகளும், ரூபா 63,814,959 தொகைக்கான ஏனைய வருமான நிலுவை மற்றும் ரூபா 49,728,661 தொகையான கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக முறைசார் வீதமாக பேணப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள், சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| இலங்கை குடியரசு நிதிப் பிரமாணங்கள் 570(1)(2) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 02 வருட காலத்தை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 4,120,439 தொகைக்கான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,884,360 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விட குறைந்த வருமானம் ரூபா 1,254,884 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 5,139,249 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 426,123 தொகைக்கான வீத வரி தொகையில் மீளாய்வாண்டின் போது 31 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டுக் காணப்பட்டதுடன் 1999 ஆண்டின் பின்னர் வீதவரி பெறுமதி மதிப்பீடு ஒன்று மேற் கொள்ளப்படாமையால் பெற வேண்டிய வீத வரி வருமானத்தை சபை இழந்துள்ளது.

#### 2.2.2 ஏக்கர் வரி

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 64,246 தொகையான ஏக்கர் வரி தெகையில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது ரூபா 5,537 தொகை மாத்திரமே. நிலுவை ஏக்கர் வரியினை அறவீடு செய்தல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) (அ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வியாபர வரியின் பெறுமதிகள் முறையே ரூபா 274,566 தொகை மற்றும் ரூபா 864,450 தொகை ஆகும். மீளய்வாண்டின் வர்த்தக

அனுமதிப் பத்திர கட்டணம் அறவீடுகள் 42 சதவீதமும் மற்றும் வியாபார வரி அறவீடு 42 சதவீதம் மற்றும் வியாபார வரி அறவீடுகள் 61 சதவீதம் ஆக காணப்பட்டதுடன், வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை வரியினை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதிமன்ற தண்டபணம் ரூபா 900,304 தொகை கிடைக்க வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

(அ) அமைய, தற்காலிக, பிரதியிட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 11 ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 2,915,105 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த இடமாற்ற முறைமை ஒன்று செயற்படாமையால் ஆயுர்வேத பெண் வைத்தியர் 10 வருடங்களும், மூன்று அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் 10 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலமும், தொழில்நுட்ப சேவை உத்தியோகத்தர் ஒருவர் 07 வருட காலமும், மற்றும் முன்பள்ளி ஆசிரியை ஒருவர் 15 வருட காலம் இடையறாமல் சபையில் சேவையாற்றுகின்றனர்.

(இ) சபையின் அலுவலக உதவியாளர் பதவியில் சேர்க்கப்பட்டிருந்த ஐந்து ஊழியர்கள்ஈ வேலைப் பரிசோதகர் உப அலுவலகத்திற்கு பொறுப்பாக கடமையாற்றல், மின் தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் நூலக பெண் உதவியாளர் ஆகிய பதவிகளின் கடமைகளை நிறைவேற்றி வந்துள்ளனர். மேலும் வெளிக்கள தொழிலாளர் கணிணி தரவு செயற்படுத்துபவர் ஆகிய சேவையில் ஈடுபடுத்தியிருந்தனர்.

### 3.2 திண்ம கழிவு பொருள் முகாமைத்துவம்

குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று சபையில் காணப்படவில்லை. அத்துடன் நாளாந்தம் சேகரிக்கும் குப்பைகளில் இருந்து உக்கக் கூடிய குப்பைகளை வெராதொடகந்த காணியின் கிடங்குகள் தோண்டி அதில் புதைக்கப்பட்டு மண்ணினால் மூடப்படல் மேற்கொள்ளப்படுவதுடன், உக்காத குப்பைகளை சபையின் கடையில் குவிக்கப்பட்டிருந்தது . அதே போல தற்போது குப்பைகளை குவிப்பதற்கு பயன்படத்தப்படும் காணிக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரமொன்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 5,012,888 தொகையொன்றின் மூலம் 2013 ஆண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த இமதுவ மாவல்ல காணியின் தகண கூடத்தின் எரிக்கப்படும் அறை 2014 திசெம்பர் 26 திகதி முதல் செயற்படாது காணப்பட்டது. திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, 2016 மார்ச் 26 திகதி முதல் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 திகதி அளவில் மீண்டும் செயற்படாது காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 20 ஆம் திகதி பொது நிருவாக, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 6,009,602 கிரயத்தையுடைய டிபர் வண்டி சபைக்கு கிடைத்திருந்த நாள் முதல் பயன்படுத்தபடாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 1,030,000 கிரயத்தையுடைய டாடா இன கப் வண்டியை ஓட்ட வேலைக்குப் பயன்படுத்தப்படாமல் தகன கூடத்தின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) அரச நிறுவனங்களில் காணப்படும் பாவணைக்கு உதவாத வாகனங்களை பாவணையிலிருந்து அகற்றுவது தொடர்பாக நிதி அமைச்சு செயலாளரின் 2/2015 இலக்கம் கொண்ட 2015 ஜூலை 10 ஆம் திகதி பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் சபைக்குச் சொந்தமான ரூபா 1,959,000 கிரயத்தையுடைய 03 வாகனங்கள் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய 08 செலவு விடயங்களில் ரூபா 28,451,459 தொகைக்காக சேமிப்பும், மேலும் செலவு விடயம் ஒன்றில் ரூபா 11,357 இற்கான பிரதிகூலமான முரண்களும், 08 வருமான விடயங்களில் ரூபா 26,288,365 தொகைக்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுபாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 தீர்க்கப்படாத மற்றும் பதில் அளிக்கபடாத கணக்காய்வு ஐய வினாக்கள்

முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பந்தி 2.2.1 (ஈ), (எ), (ஏ), 4.2 (இ), (ஈ) மற்றும் 4.5 மற்றும் 4.6 ஆகிய பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை சரி செய்வதற்காக இணங்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போதும் குறிப்பிட்ட சரி செய்யும் வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கண்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுதல்

2009 ஜூன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | செயற்பாட்டில் காணப்படும் தகனசாலைகள் மற்றும் இயந்திர உபகரணங்கள் பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) வாகன நிருவாகம் | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) சில வாகனங்கள் பயன்படுத்தக் கூடிய கருமங்கள் எதற்கும் பயன்படுத்தாது துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. |
| | (iii) வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானங்களை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தியிருக்க வில்லை. |
| | (ii) கருவா பயிர்செய்கையின் விளைச்சலை பெற்றுக்கொள்வதற்கு முறையான நடைமுறையொன்று தயாரித்திருக்கவில்லை. |
| | (iii) 1999 ஆண்டின் பின்னர் புதிய வீதவரி பெறுமதி மதிப்பீடு பெற்றிருக்கவில்லை. |
| | (iv) கடைகளில் உரிமைகளினைத் தீர்த்து, வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (v) முன்னேறிய பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ஈ) கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) முன்னைய ஆண்டுகளில் இருந்து முன்கொண்டு வந்து காணப்படும் கணக்கு மீதிகளை தீர்த்திருக்கவில்லை. |

(ii) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியக் கடன் தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையினால் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் கீழ்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

- நட்டங்கள் சேதங்கள் பதிவேடுகள்
- கடன்கொடுத்தோர் பதிவேடு
- கடன்பட்டோர் பதிவேடு
- கணினி, துணைக்கருவி மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு

(iv) சொத்துக்கள், வகுப்பு அடிப்படையில் வெவ்வோறாக விவரங்கள் காட்டக்கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(v) சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(vi) வாகனங்கள் தொடர்பாக விபரங்களை உள்ளடக்கி பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(உ) பணியாளர் குழு முகாமைத்துவம்

(i) மிகைப் பதவியணியினை முறைப்படுத்து வதற்கும் அதே போல் வெற்றிடங்கள் நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பதவிகளுக்கு பொருத்தமற்ற கடமைகள் சாட்டப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(i) வருடாந்த பாதீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 08 விடயங்களில் சேமிப்பு காணப்பட்டது.

(ii) செலவு விடயம் ஒன்றில் எல்லைகளை மிகைத்து செலவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

(iii) 8 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் காணப்படுவதினால் வருமான இலக்குகளை நெருங்கியிருக்கவில்லை.